ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1814/53 - 2013 ජූනි මස 12 වැනි බදාදා - 2013.06.12

*1814/53 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க. நகர அபிவிருத்தி செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மற்றும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணையில் குறிந்துரைக்கப்பட்ட காணிகளானது மெதவல நகர அபிவிருத்தி செயல்திட்டத்தின் கீழ் மெதவல விளையாட்டுத்திடல் அபிவிருத்திக்காக உடனடியாக தேவைப்படுகின்றது என கருதுவதனால், குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு 10,*
*2013, யூன் 06.*

***அட்டவணை***

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹரிஸ்பத்து பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, ஹரிஸ்பத்து பிரதேச சபை பிரிவில் அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவு இல. 484 மெதவலயில் உள்ள மெதவல கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டுகள் இல. 01, 02 மற்றும் 03 ஆகிய கெதரகும்புற அல்லது வாகலே கும்புற, அற்லா கேகும்புற மற்றும் நாகஹா மூல அங்கேகும்புற என்றழைக்கப்படும் மூன்று (03) காணித்துண்டுகளும், பதிவு செய்யப்பட்ட உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. டி. எம். ஏ. சி. திசாநாயகவினால் 09.07.2011 இல் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 1222 இல் 0.51021 ஹெக். விஸ்தீரணம் எனக் காட்டப்பட்டுள்ளது.*

*குறிப்பிட்ட காணி எல்லைகள் பின்வருமாறு :*

*காணித்துண்டு இல. 01 - 0.23063 ஹெக்.*

*வடக்கு : கால்வாய்க்கரை ;*

*கிழக்கு : கால்வாய்க்கரை மற்றும் காணித்துண்டு இல. 02 ;*

*தெற்கு : கால்வாய்க்கரை மற்றும் அனில் வீரசேகர அத்துடன் மற்றவர்களாலும் உரிமை கோரப்படும் ஹிட்டினகெதர ;*

*மேற்கு : திரு. எம். ஜி. திலகரட்னவால் உரிமை கோரப்படும் தல்கஹாபலேகும்புற.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*காணித்துண்டு இல. 02 - 0.18110 ஹெக்.*

வடக்கு : *கால்வாய்க்கரை ;*

கிழக்கு : *கால்வாய்க்கரை ;*

தெற்கு : *கால்வாய்க்கரை, திரு. சம்பா தர்மவர்த்தன அத்துடன் மற்றவர்களாலும் உரிமை கோரப்படும் மதவலபிட்டிஹேன ;*

மேற்கு : *கால்வாய்க்கரை, காணித்துண்டு இல. 01 மற்றும் அனில் வீரசேகர அத்துடன் மற்றவர்களாலும் உரிமை கோரப்படும் ஹிட்டினகெதர வத்தை.*

*காணித்துண்டு இல. 03 - 0.09848 ஹெக்.*

வடக்கு : *கால்வாய்க்கரை மற்றும் காணித்துண்டு இல. 02 ;*

கிழக்கு : *கால்வாய்க்கரை மற்றும் திரு. எச். எம். அபயசிங்ஹவால் உரிமை கோரப்படும் காணி ;*

தெற்கு : *சம்பா தர்மவர்த்தனா, மஹிந்த வீரசிங்ஹ அத்துடன் மற்றவர்களாலும் உரிமை கோரப்படும் மதவலபிட்டிஹேன, உதேனி சமரநாயக்கவினால் உரிமை கோரும் காணி அத்துடன் கால்வாய்க்கரை ;*

மேற்கு : *காணித்துண்டு இல. 02.*

*06-741*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.